[1984 மார்ச் 9

கதர்த் தொழிலை அபிவிருத்தி செய்யும் திட்டம்.

193—(*வினா எண். 20588) திரு. சி. கணேசன்: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களிடையே கதர்த் தொழிலை அபிவிருத்தி செய்ய அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: (அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் 14 வட்டங்களில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் 500 கிராமிய நூற்பு நிலையங்கள் செயல்படுகின்றன. புதியதாக 47 நூற்பு நிலையங்கள் தொடங்கப்பட உள்ளன. இக்கிராமிய நூற்புக் கூடங்களின் மூலம் பாமர மக்களுக்கு அவரவர்கள் இருக்கும் இடங்களிலேயே வேலை வாய்ப்பும், நிரந்தர வருவாயும் கிடைக்கிறது.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. சி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மக்களிடையே கதர்த் தொழிலை அரசு அபிவிருத்தி செய்கிறது என்பதைக் கேட்டு சந்தோஷப்படுகிறேன். அதே போல குடிசைப் பகுதிகளில் சும்மா இருக்கிற தாய்மார்களுக்கு ஊக்கம் தருகின்ற வகையில் மூலப் பொருள்களை வாங்கவும், இன்னும் அது சம்பந்தமாக பொருள்களை வாங்கி தொழில் நடத்துவதற்காக மான்யமாக அல்லது கடனாக அளித்து உதவ அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கிராமங்களில் இது போன்ற கிராம நூற்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு, அதன்மூலம் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் இப்போது பனைப் பயிற்சி தொழில் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு, அதன் மூலம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தும், அதற்கு வேண்டிய கருவிகளை அரசு மான்யம் மூலம் அளித்தும் வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.